# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2150/41 - 2019 නොවැම්බර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.11.21

*2150/41 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**பிரகடனம்**

*ச.அ.இல.* PS/CSA/*1/1/10*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 31 (3) ஆம் உறுப்புரையின் கீழ் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின்போது அதிமேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் இரண்டாயிரத்துப்பத்தொன்பதாம் ஆண்டு நவெம்பர் மாதம் பதினேழாம் திகதி இலங்கைக் குடியரசின் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாராதலாலும்,

அத்துடன், சனாதிபதியின் பதவிக்காலம் சொல்லப்பட்ட அரசியலமைப்பின் 31(4) ஆம் உறுப்புரையின் பயனைக் கொண்டு இரண்டாயிரத்துப்பத்தொன்பதாம் ஆண்டு நவெம்பர் மாதம் பதினேழாம் திகதியன்று தொடங்கியதாதலாலும்,

அத்துடன், அரசியலமைப்பின் 157 அ (7) ஆம் உறுப்புரையுடன் வாசிக்கப்படும் 32 ஆம் உறுப்புரையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு, அதியுத்தமராம் கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள் சொல்லப்பட்ட அரசியலமைப்பின் நான்காம் அட்டவணையிலும், ஏழாம் அட்டவணையிலும் தரப்பட்டுள்ள உறுதியுரைகளை மொழிந்து கீழொப்பமிடுவதன் மூலம் இரண்டாயிரத்துப்பத்தொன்பதாம் ஆண்டு நவெம்பர் மாதம் பதினெட்டாம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியைக் கையேற்றார் என்பது இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

இதனை அனைவரும் அறிந்து கொள்வீர்களாக.

இரண்டாயிரத்துப்பத்தொன்பதாம் ஆண்டு நவெம்பர் மாதம் பதினெட்டாம் திகதி அநுராதபுரத்தில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ.பி.ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 01,
2019, நவெம்பர் மாதம் 19 ஆம் திகதி.

*12-115*


1A - G 31530 — 387 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*